Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No C.C.NO. 13/2023
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.3, Page.No.55/2023

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சத்தியசீலன் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | பாலு | தொழில் | தனியார் வேலை |
| கிராமம் | திருப்பத்தூர் | மதம் | இந்து |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 26 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 27 day of June 2023.

**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**முதல் விசாரணை.-** (எதிரி அப்துல்லா பாஷா ஆஜரில் உள்ளார்)

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தனியார் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜர் மற்றும் எதிரி அப்துல்லா பாஷாவின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 06.11.2022 அன்று காலை 11.15 மணியளவில் தூய நெஞ்சக் கல்லுரி அருகே நானும், எனது நண்பர் கவியரசும் சென்றபோது போலிசார் ஆஜர் எதிரியை பிடித்து விசாரித்துக்கொண்டு இருந்தார்கள். அப்பொழுது ஆஜர் எதிரி நான் தான் செயின்ஸ் ஸ்னாச்சிங் செய்தேன் என்று ஒப்புக்கொண்டு ஒரு வாக்குமூலம் அளித்தார். அதன் பின்பு எதிரி பேரணாம்பட்டில் எ.பி.எஸ் சர்வீஸ் சென்டரில் செயினை போலிசாரிடம் எடுத்துக்கொடுத்தார். இதற்கும் ஒப்புதல் வாக்குமூலத்திற்கும் சாட்சியாக இருந்து மேலே குறிப்பிட்ட கையொப்பத்தை நான் செய்தேன். **கைப்பற்றுதல் மகஜர் மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது கையொப்பம் முறையே அ.த.சா.ஆ.3 மற்றும் அ.த.சா.ஆ. 4 ஆக குறியிடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.-**

செயின் கைப்பற்றியதாக தயார் செய்யப்பட்டுள்ள மகஜரில் உள்ள கையொப்பம் என்னுடையதா என்றால் நான் இரண்டு கையொப்பம் செய்துள்ளேன். 2 கையொப்பத்தையும் நான் காவல் நிலையத்தில் வைத்து செய்தேன். என்னுடன் கவியரசு என்பரும் கையொப்பம் செய்தாரா என்றால் செய்தார்.

**மறு விசாரணை:** இல்லை.

Signature of Witness